MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T82R0

நோயாளி தகவல் கையேடு

# ஆஸ்பிரின்

(ASPIRIN)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

# உடல் வலி, காய்ச்சல், மூட்டு அழற்சி (arthritis) மற்றும் சில வகை அழற்சிகளுக்குச் சிகிச்சை அளிக்க ஆஸ்பிரின் பயன்படுத்தப்படுகிறது. மாரடைப்பின் அபாயத்தைக் குறைக்கவும் அது பயன்படுத்தப்படுகிறது.

பின்வருபவை இருந்தால், மருந்தைப் பயன்படுத்துவதற்கு முன்பாக மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- ஆஸ்பிரினுக்கோ, அல்லது மற்ற ஸ்டெராய்டு-அல்லாத, அழற்சி-எதிர்ப்பு மருந்துகளுக்கோ ஒவ்வாமை இருந்தால். எ.கா. இபுப்ரோ.ஃபென் (ibuprofen), நப்ரோக்ஸென் (naproxen), மெ.ஃபெனாமிக் அமிலம் (mefenamic acid), டைகுளோ.ஃபெனக் (diclofenac).
- கர்ப்பமாக இருந்தால் மற்றும்/அல்லது தாய்ப்பால் கொடுத்தால் (ஆஸ்பிரின் பிரசவக் காலத்தையும் பிரசவத்தையும் சிக்கலாக்கலாம்).
- மற்ற மருந்துகள் எடுத்து வந்தால். உதாரணத்திற்கு, ஸ்டெராய்டு-அல்லாத, அழற்சி-எதிர்ப்பு மருந்துகள் மற்றும் “இரத்த அடர்த்திக் குறைப்பிகள்” (எ.கா. வார்.ஃபரின்)
- மற்ற மருத்துவப் பிரச்சினைகள் இருந்தால்:
  - குடல்வால் அழற்சிக்கான (appendicitis) அறிகுறிகள்
  - இரத்த உறைவில் அல்லது இரத்த வட்டு (platelets) செயல்திறனில் கோளாறுகள்
  - இரைப்பைப் புண் (ulcer) போன்ற குடல் சார்ந்த பிரச்சினைகள்

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப நீங்கள் எடுக்க வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். அவர் கூறும் அளவுகளிலேயே மருந்தை உட்கொள்ளுங்கள்.

மாத்திரைகள் (வழக்கமானவை, மெல்லக்கூடியவை):

- உணவு, பால் அல்லது ஒரு கிளாஸ் தண்ணீருடன் எடுங்கள்.
- மெல்லக்கூடிய மாத்திரைகளை, உணவு உண்ட பிறகு, மென்று விழுங்கலாம் அல்லது அப்படியே விழுங்கலாம்.
- கரைசலை (solution) வாய் கொப்பளிக்கப் பயன்படுத்தலாம். அன்பு கூர்ந்து கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளைப் பின்பற்றுங்கள்.

மாத்திரைகள் (மருந்தை மெதுவாக வெளிவிடுபவை, மேல் பூச்சு உடையவை):

- இந்த மாத்திரையை முழுதாக விழுங்குங்கள். நுணுக்காதீர்கள்.
- உணவு உண்ட பிறகு, ஒரு கிளாஸ் தண்ணீருடன் எடுங்கள்.

மாத்திரைகள் (நீரில் கரைத்து அருந்தக்கூடியவை):

- இந்த மாத்திரையை கொதித்து ஆற வைத்த ஒரு கிளாஸ் நீரில் கரைத்து, உணவு உண்ட பிறகு அருந்துங்கள்.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பின்வரும் பக்க-விளைவுகளில் ஏதேனும் இருந்தால், உடனே மருத்துவரை அழையுங்கள்:

- கடுமையான வயிற்று வலி
- இரத்தம் கலந்த வாந்தி, அல்லது காபியின் அடிமண்டி போல் காட்சியளிக்கும் வாந்தி
- மலம் அல்லது சிறுநீரில் இரத்தம்
- தோலில் மிகத் தீவிர அரிப்புடன் கூடிய தடிப்புகள்
- முகம் அல்லது கண் இமைகள் வீங்குதல்
- மூச்சு இழைத்தல் அல்லது மூச்சு விடச் சிரமப்படுதலி
- கடுமையான தலைச்சுற்றல் அல்லது மந்தம்
- காதில் மணியடிக்கும் ஒலி

பின்வரும் சற்று கடுமை குறைந்த பக்க-விளைவுகள் இருந்தால், மருத்துவரிடம் கூறுங்கள்:

- வயிற்றுக் கோளாறு
- நெஞ்சு எரிச்சல்

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

மருத்துவர் உத்தரவிட்டாலன்றி, எந்தவொரு அறுவை சிகிச்சைக்கும் முன்பாக 5 முதல் 7 நாட்களுக்கு ஆஸ்பிரின் உட்கொள்ளாதீர்கள்.

இரத்தக் கட்டிகள் உருவாவதைத் தடுப்பதற்காக நீங்கள் ஆஸ்பிரின் எடுத்து வந்தால், வேறு வலிநிவாரண மருந்துகளை எடுப்பதற்கு முன்பாக மருத்துவரிடம் கேளுங்கள்.

நீண்ட காலத்திற்கோ அல்லது அதிக அளவிலோ ஆஸ்பிரின் உங்களுக்குத் தரப்பட்டிருந்தால், மருத்துவரிடம் வழக்கமாகச் சென்று உடல் முன்னேற்றத்தைச் சோதித்துக் கொள்ளுங்கள். இரைப்பை பாதிக்கப்படலாம் என்பதால், மதுபானங்கள் அருந்தாதீர்கள்.

**நீரிழிவு நோயாளிகளின் கவனத்திற்கு:** சிறுநீர்ச் சோதனையில், சிறுநீரில் சீனி இருப்பதாக ஆஸ்பிரின் தவறாகக் காட்டும்.

நீங்கள் மற்ற மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை ஏற்கனவே உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் உடனே தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது இருக்கும்: முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சுவிட சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்தை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.